# தமிழறிஞர்களின் பெண்ணியச் சிந்தனைகள்

103

**முனைவர்: ஜா.ஞா.ஜோணி ஜெபமலர்**
**உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை தலைவர்**
**முஸ்லிம் கலைக்கல்லூரி**

முன்னுரை:

பெமினிசம் என்ற சொல்லுக்கு இணையானத் தமிழில் பெண்ணியம் என்ற சொல் வழக்காகி விட்டது. பெண்ணியம் என்பது உலகளாவிய சொல். இது பரவலாகப் பேசப்படுகின்றது. பெண்ணியம் பொருளாதாரம் தொழில் பண்பாடு, இலக்கியம் ஆகிய அனைத்திலும் ஒலிக்கின்றது. பெண்ணியம் என்பது பெண்களைப் பற்றிய சிந்தனையை சமூகம் ஓங்கி ஒலிப்பதை பல்வேறு அமைப்புகளில் காணமுடிகிறது. பெண்களின் பெருமைகளைப் போற்றி கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் மங்கையராகப் பிறக்க நல்ல மாதவம் செய்ய வேண்டும் என்று பெண்களைப் போற்றுகிறார். இவரைப் போன்று பாரதியார், பாரதிதாசன், பெரியார், காந்தியடிகள், திரு.வி.க, மகரிசி போன்ற பேரறிஞர்களும் பெண்ணின் பெருமையை பேசுகின்றனர். இக்கட்டுரையில் இவ்வறிஞர்களின் பெண்ணியச் சிந்தனைகளைக் காண்போம்.

பெண்ணியம் விளக்கம்:-

குநஅiயெ என்ற இலத்தின் மொழிச் சொல்லில் இருந்துதான் குநஅinளைஅ என்ற ஆங்கிலச் சொல் வந்தது. குநஅinளைஅ என்ற சொல்லுக்கும் தமிழில் பெண்ணியம், பெண்ணின் வாதம், பெண் நிலை ஏற்பு, மகளிரியல், பெண்ணிலைக் கொள்கை என்ற பல சொற்கள் வழங்கப்படுகின்றன.

பெண்ணியம் என்பது பெண்கள் தாம் எதை விரும்புகின்றனவோ அதைச் செய்யவும், எதைச் செய்ய விரும்பவில்லையோ அதை செய்யாதிருக்கவும் உள் சுதந்திரம் ஆகும். பெண்களின் உரிமைகள் கேட்டு எழுதப்படும் குரல்கள் பெண்ணியமாகும்.

“ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையகம் தழைக்குமாம்”.

என்ற பாரதியின் பாடற்பொருள் நாடு முழுவதும் ஒலிக்கத் தொடங்கியது. பெண்களுக்கு சம உரிமை, சமூகமதிப்பு, கல்வி பெறுதல், அனைத்துத் துறைகளிலும் உரிமைகளைப் பெறுதல், சமூக அரசியல் பொருளாதார அடக்கு முறைகளில் இருந்து விடுபடல் முதலான கருத்துக்களே பெண்ணியத்தை உருவாக்கின. பெண்கள் சம உரிமை பெறவும் ஆணுக்கு நிகர் என்ற சமத்துவத்தை நிலை நாட்டவும், முற்போக்கு கருத்துக்களும் தோன்றின.

பெண்ணியச் சிந்தனைகள்:-

பெண்ணினத்தின் பெருமை பேசி மூச்செல்லாம் அவர்கள் முன்னேற்றத்துக்காக வழங்கப் பெண் குலத்தை பெருமையுறச் செய்ய இளமை பருவத்திலேயே பெண்ணிய வாதியாக விளங்கினார் திரு.வி.க அவர்கள். பெண்மையைத் தாய்மையாகக் கருதும் எண்ணமும், தெய்வமாக தொழும் மற்றும் அவருடைய இரத்தத்திலேயே ஊறியது. பெண்களுக்கு ஏற்படும் இன்னல்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தார்.

“ஆணெனும் அரக்கனாக வாழ்வதிலும்

பெண்ணெனும் தெய்வமாக வாழ்வதில் எனக்கு விருப்பமுண்டு”
என்று பொரியாரிடம் ஒருமுறை மார்தட்டினார்.

பெண்களுக்கு உரிமை கொடுப்பது ஆண்மகனின் கடமையாக கருத வேண்டினார். பெண்களின் பெருமையை உணர்ந்து அவர்களை தெய்வமாக போற்ற நினைத்தார். அவர்களை வருத்தும் நிலை தேசத்தை விட்டு அகலவேண்டும்.

பெண்களுக்குத் தேசபற்று ஊட்டும் கல்வியை கற்பிக்க முனைப்போடு செயல்பட்டார். குடும்ப சூழலை நினைவு கூர்ந்து செலவழிக்கும் ஞானத்தையும், புத்திகூர்மையும் பெண்கள் பெறவேண்டும். சமூகத்தில் விதவைப் பெண்களுக்கும், அனாதைப் பெண்களுக்கும் ஆசிரமங்கள் அமைப்பதோடு அவர்கள் வாழ்க்கை ஒளிர செய்ய வேண்டும் என கனவு கண்டார்.

பாரதியாரின் பெண்ணிய சிந்தனை:-

பாரதியின் பாடல்கள் சமூக விழிப்புணர்வையும், விடுதலை உணர்வையும் தெளிவுபடுத்துவதாக அமைந்திருந்தன. அவை மக்கள் மனதில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. பெண்களின் பிரச்சனைகளை முழுமையாக உணர்ந்து வெளிக்கொணர்ந்தவர் பாரதியார். ஆணுக்கு பெண் அடிமை என்ற போக்கு அறவே ஒழியவேண்டும். பெண்ணுக்கு விடுதலை வேண்டும் என்று பல்வேறு முழக்கமிடுகின்றார். பெண்ணுக்கு விடுதலையென்றிங்கோர் நீதி, பெண்ணுக்கு விடுதலை இல்லை யென்றால் பின்னிந்தவுலகினிலே வாழ்க்கையில்லை. பெண்ணுக்கு விடுதலை இல்லை யென்றால் இந்த உலக வாழ்க்கை சிறக்காது என்பது பாரதியின் அழுத்தமான கருத்தாகும்.

“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இறைப்பில்லை காணென்று கும்மியடி”

அறிவு என்பது பொதுவானது. அதற்கு ஆண், பெண் என்கிற பேதமில்லை. பெண்கள் அறிவினிலும் ஒருபோதும் ஆண்களுக்கு சளைத்தவர்கள் இல்லை என்பதை மேற்கண்ட பாடல் வரிகளில் சுட்டிக் காட்டுகிறார்.

பெண்களை இழிவுப்படுத்துகின்ற ஒரு பழக்கத்தை அறிவில்லாத செயலாக மூடநம்பிக்கையாகவே கருதுகின்றார். மாதா தம்மை இழிவு செய்யும் மூடநம்பிக்கையைக் கொளுத்துவோம் என்கிறார். ஆணுக்கு பெண் சமம் என்பதில் எந்த பாகுபாடும் கொள்ளக்கூடாது. பெண்களுக்கு அனைத்திலும் சம உரிமை வழங்க வேண்டும் என்று பாரதி பெண்ணுரிமை பற்றி குறிப்பிடுகிறார். கணவன்மார்கள் தம் மனைவியை அடிமையாக நடத்தும் போக்கை வன்மையாக கண்டிக்கிறார்.

‘தெய்வம் தொழாஅள் தொழு நன் தொழுது எழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை’ இந்த குறளில் பிற தெய்வங்களைத் தொழாது தன் தெய்வமாகிய கணவனை தொழுது, துயிலெழுவாள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும் என்பது பரிமேலழகர் உரை கற்புடையவளுக்கு கடவுளும் ஏவல் செய்யும் என்பது பரிமேலழகர் விளக்கும் பெண்களின் கற்புத்திறத்தின் சிறப்பைப் பாராட்டி வள்ளுவர் கூறினாலும், இது ஒரு பெண்ணடிமை கருத்து ஆணாதிக்க சமுதாயத்தின் கருத்தாகவே உள்ளதாக பெரியார் வள்ளுவரை சாடுகிறார். ஆணை தொழுது எழ வேண்டும் என்று

பெண்ணுக்கு நிபந்தனையிருப்பதால் பெண்ணையும் ஆண் தொழுது எழ வேண்டும் என்று பெரியார் குறிப்பிடுகிறார்.

பெண்கள் திறமையானவர்கள் சிறந்த மனம்படைத்தவர்கள். புத்திகூர்மையுள்ளவர்கள், வலிமையுடையவர்கள் அவர்களுக்கு ஐந்து புலன்கள் உண்டு என்பதை சிறப்பித்துப் பர்டும் வகையில்

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திரும்புவதில்லையாம். என்று குறிப்பிடுகின்றார்

ஆணுக்கு இணையாகப் பெண்ணும் திறமையுடையவர் ஆணுக்கு நிகராகப் பெண்ணுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டால் அது வெளிப்படும். பெண்களின் அடிமை நிலைக்கு முதன்மைக் காரணமாக கல்வியின்மையினையே பார்த்து கருதுகின்றார். பெண்களுக்கு கல்வி அளிப்போமானால் அவர்களின் நன்மையை அவர்களே தேடிக் கொள்வார்கள். ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார் எனும் பாடல் மூலம் பெண்கல்வியை இனி யாராலும் தடுக்க முடியாது என்று கூறுகிறார்.

பாரதிதாசனின் பெண்ணியச் சிந்தனைகள்:

ஓர் ஆணின் வெற்றிக்குப் பின் நிற்பவள் பெண் என்பது அறிஞர் பெருமக்கள் கண்ட ஒருமித்த கருத்து ஆகும். சமூகத்தில் பெண்களுக்குக் கல்விகற்கும் உரிமை தாங்கள் விரும்பியவனை மணக்கும் உரிமை வாழும் ஆகியவை மறுக்கப்பட்டிருந்ததுடன் கொத்தடிமைகளாக மதிக்கப்பட்டிருந்தன. இக்கருத்தினை பாரதிதாசன் மிக அழுத்தமாகக் கூறுகின்றார்.

"கல்வியில்லை உரிமையில்லை பெண்களுக்குக்
கடைத்தேற வழியின்றி விழிக்கின்றார்கள்
புல்லென்றே நினைக்கின்றார் மனைவி மாரைப்
புருஷர்களின் உபயோகம் பெரி தென்கின்றீர்
வல்லவன் பேரறிஞன் ஷா வார்த்தை கேட்டீர்
மனோ பாவம் இனியேனும் திருத்த வேண்டும்"

ஆண்களும் பெண்களும் இணைந்ததே சமூதாயம். இவ்விருவரும் இல்லாமல் முழுமையான நிறைவான சமூதாயம் தோன்ற முடியாது. இருவரின் முன்னேற்றம்தான் சமூதாயம் முன்னேற்றம் என்கிறார். பல்வேறு குழப்பங்களால் பெண்கள் சமூதாயத்தின் முன்னேற்றம் தடைப்பட்டது. அதனால் அவர்கள் அடுப்புக்கும் பள்ளியறைக்கும் இடையே தங்கள் வாழ்வை முடித்துக் கொண்டனர். ஊமை என்று பெண்ணை உரைக்கும் மட்டும் உண்டாகும் ஆமை நிலைதான் ஆடவர்க்கு உண்டு என்றும், பெண் சமுதாயம் சீர்பட்டால்தான் ஓர் ஆரோக்கியமான சமூதாயம் உருவாகக் முடியும் என்பது உண்மை. அதனால் பெண்களுக்குக் கல்வியறிவு ஊட்ட வேண்டுய அவசியம் என்கிறார்.

பெண்கட்குக் கல்வி வேண்டும் குடித்தனம் பேணுதற்கே
பெண்கட்குக் கல்வி வேண்டும் மக்களைப் பேணுதற்கே
பெண்கட்குக் கல்வி வேண்டும் உலகினை பேணுதற்கே
பெண்கட்குக் கல்வி வேண்டும் கல்வியைப் பேணுதற்கே

என்கிறார். கல்வியின்மையால் ஏற்படும் தீமைகளையும் பாரதிதாசன் குறிப்பிடுகின்றார்.
இளம் வயது சிறுமியைப் பள்ளிக்கு அனுப்பிவைக்கும் தாயை தம்முடைய கற்பனையில் கண்டு பரவசம் அடையும் நிலையைப் பாட்டின் வழி உரைக்கின்றார்.

தலைவாரிப் பூச்சூடி உன்னைபாட
சாலைக்குப் போவென்று சொன்னால் உன் அன்னை
என்றும் அன்னையைப் பிரிய விரும்பாத குழந்தை நிலையை
சிலைப்போல் ஏனங்கு நின்றாய் நீ
சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்
விலை போட்டு வாங்கவா முடியும் கல்வி?
வேலை தோறும் கற்று வருவதால் முடியும்
என்று கூறி கல்வியின் சிறைப்பை உணர்த்துகிறார்.
நிலவிலே பெண்கள் இறங்கும் நாள்
நெடுநாள் ஆகாததென்று குலவு மகளே விரைவினில்
என்றார் வானுர்த் செலுத்துதல் வையமாக்கடல் முழு தளத்தில் ஆசை செய்தலும். ஆண் பெண் அனைவருக்கும் பொதுவே என்று பகர்ந்த பாரதிதாசனின் கனவை இந்திய வம்சவளியான கல்பனாசவ்லா அமெரிக்க விண்வெளி ஓடத்தில் சென்று அழியாப் புகழ் எய்திய செய்தி உலகறிந்த என்றாகும் பெண் கல்வி கற்று திகழ்ந்தால் வீடு செம்மையுறும் வீடு செம்மையுற்றால் சமுதாயத்தில் புரையோடியுள்ள மூட நம்பிக்கைகள் விலகும். நாட்டின் வளம் பெருகும் இவை பாரதிதாசன் எண்ணக்கனவு ஆகும்.

பெரியாரின் பெண்ணியச் சிந்தனைகள்:

ஒரு வீட்டில் நாலு ஆணும் ஒரு பெண்ணும் இருந்தால் அந்த ஒரு பெண்ணை படிக்க வையுங்கள் வையம் வளரும் என்றார். பெண்ணியச் சிந்தனையின் பல சிகரங்களைத் தொட்டவர் பெரியார். விதவைத்தனம் குழந்தை மணம், ஒருத்தலைக்கற்பு, பெண்மையை இழிவுபடுத்ததுதல், வைதீகத் திருமணம், பெண் சம்மதமில்லாத திருமணம், ஆடம்பரத் திருமணம், வரதட்சனைக் கொடுமை, பெண்களுக்குச் சொத்துரிமை, விவாகரத்து உரிமை, மறுமண உரிமை இல்லாதது, பெண்களை சில வேலைகளில் மட்டும் அமர்த்துவது. பெண்களை அடிமைப் படுத்துவது என பெண்களுக்கு இழைக்கப்படும் இத்தகைய அநீதிகளை கண்டித்து இவற்றிற்கான தீர்வுகளை பரிந்துரை செய்திருக்கிறார்.

பெண்களுக்குக் கல்வியும் விடுதலையும் ஒரே முகத்தின் இருவிழிகள் எனலாம். பெண்களை நன்கு படிக்க வைக்க வேண்டும். தங்கள் ஆண் பிள்ளைகளைப் போலவே பெண் பிள்ளைகளுக்கும் செலவு செய்து கல்வி வழங்க வேண்டும். வாழ்க்கையில் ஏதாவது ஒரு தொழிலைக் கற்றுக் கொடுக்க வேண்டும். தகுந்த வயதும் தொழிலும் வாய்த்த பிறகு பெண்களாகவே தங்கள் கணவரைத் தேர்ந்தேடுத்துக் கொள்ளுமாறு செய்ய வேண்டும். ஆணும் பெண்ணும் சேர்ந்து பயின்றால் பல தீமைகள் அகலும். அறிவு வளர்ச்சி, உடல் வளர்ச்சி இரண்டும் இருபாலருக்கும் பொதுவானவை. இன்ன துறைகளில் தான் பெண்கள் அறிவு பெற வேண்டும் என்ற வரையறை கூடாது என்றெல்லாம் சிந்திக்கக் வைத்தார். பள்ளி ஆசிரியர் பணியில் பெண்களே அதிக அளவில் நியமிக்கப்பட வேண்டும். தொடக்கக் கல்வி கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் வேலைக்கு பெண்களையே நியமிக்க வேண்டும் என்பன போன்ற தீர்மானங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

காந்தியடிகளின் பெண்ணியச் சிந்தனைகள்:

தேசிய பெண் விடுதலைக்கு வித்திட்டவர் குடும்பம், இல்லறம் பெண் கல்வியில் அடிமை நிலை போக்குதல், பாலியல விவாகம், மறுமணம், கற்புநிலை, பெண்களை பொது வாழ்க்கையில் ஈடுபடுத்துதல் போன்ற விடுதலையின் சிந்தனைகளை போர்க்களமாகக் கொண்டிருந்தார் காந்தியடிகள்.

காந்தியடிகள் கல்வியினால் மட்டும் பெண்களின் அடிமைத்தனத்தைப் போக்க முடியும் என்று கூறுகின்றார். பெண்களின் குழந்தை வளர்ப்பு, வீட்டு நிர்வாகம் போன்ற வற்றிற்குக் கல்வி கற்றுத் தர வேண்டும் எனக் கூறுகிறார்.

கற்பு நிலை யென்று சொல்ல வந்தவர் இரு
வர்க்கும் அஃது பொதுவில் வைப்போம்.

காந்தியடிகள் கற்பு பற்றி நம்பிக்கை கொண்டுள்ளார். கற்பு திடீரென்று செய்கையாய்த் தோன்றி விடக் கூடியது அன்று. அது உள்ளுணர்ச்சியிலிருந்து தோன்ற வேண்டும். ஆனால் கற்பு என்பதன் பெயரால் பெண்களை வதைப்பதை அவர் விரும்பவில்லை.

பெண்களைப் பொது வாழ்க்கையில் ஈடுபட அழைப்பு விடுத்தார். பெண்களை வெளி உலகிற்கு கொண்டு வந்தவர். காந்தி பெண்களை வைத்துக் கள்ளுக் கடை மறியல், அந்நிய ஆடை புறக்கணிப்பு போன்ற தேசிய நிகழ்வுகளில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார்.

மகரிஷி; பெண்ணியச் சிந்தனைகள்:

ஆண், பெண் அன்பில் இணைந்து உருவாகும் இல்லற வாழ்க்கையில் ஆண்களே மேலோங்கி மதிக்கப் பெறும் நிலை இன்று நிலவுகின்றது. இந்நிலை மாறி ஆண், பெண் இணைந்த புதியதொரு சமுதாயம் உருவாகப் பெண்கள் அறிவு, ஆற்றல், திறமை, நுட்பம், செல்வம் எல்லாவற்றிலும் சம உரிமை நிறைந்தவர்களாக இருக்க வேண்டும் என்று கூறுகின்றார்.

பெண்களுக்கு சிந்தனை, சிக்கனம், சீர்திருத்தம் ஆகியவற்றோடு கூடிய சிறந்த வாழ்வு தேவை என்று விரும்பியவர் மகிழ்ச்சி இவையெல்லாம் குடும்ப வாழ்வில் அமைய மனவளம் இன்றியமையாதது.

ஒழுக்கமே பெண்ணாக வளர்தல் வேண்டும் என்று விரும்பியவர் மகரிஷி இதனை உயிர்களுக்குத் துன்பமில்லா வகையிலாற்றும் உயர்ந்த செயல் ஒழுக்கமாம் உலகில் வாழும் உயிர்களுக்கு அதுகாப்பாம் என்று குறிப்பிடுகின்றார். அவர் கூறும் கற்பு நெறி விஞ்ஞானத்துடன் தொடற்புடையது. மூட நம்பிக்கை அற்றது. உடல், நலம், மனவளம், சமுதாய வளம், பொருளாதாரம், அரசியல் ஆகியவை சார்ந்தது. உவந்தொருவன் வாழ்க்கை சரியாய் நடத்த உதவுபவள் மனைவியே ஆவாள் பெண்ணிற்குள்ள பெருமை கற்பேயாகும் என்கிறார். ஆண், பெண் இரு பாலருக்கும் கற்பு அவசியம் என்றும் கற்பினைக் காப்பாற்ற வேண்டிய கடமை இருவருக்குமே என்று கூறியுள்ளார் மகரிஷி.

பழந்தமிழ் நாடு பெண்மக்கள் உரிமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது. பெண்ணுரிமையுள்ள நாடுகள் செழுமையுற்றிருக்கின்றன. பெண் அடிமைத்தனம் சமுதாயத் திற்குச் சீர்குலைவினை ஏற்படுத்து என்கிறார் மகரிஷி.

ஒரு தொழிலைச் செய்து பொருள் ஈட்டிக் காத்து
உண்டு உடுத்திக் கடமை செய்யும் உரிமை வேண்டும்

என்றும் பெண் நாட்டின் தாய் என்கிறார் எனவே பெண் உரிமையுடன் வாழ்வது நாகரிகத்திற்கு அடிப்படையாகும் என்கின்றார்.

உலகின் ஒளிமிக்க எதிர்காலம் வரவேண்டுமானால் தியாகிகளாகிய பெண்களை மதித்துப்போற்ற வேண்டும். வீடும் நாடும் சிறக்கும் என்கிறார் மகரிஷி.

முடிவுரை:

பெண் அடிமைத்தனம் சமூகத்திற்கு கேடானது பெண் அடிமைத்தனத்திலிருந்து விடுபட பெண்ணிற்கு கல்வி அவசியமாகிறது. பெண் கல்வி ஆண், பெண் சமத்துவத்திற்கு இட்டுச் செல்கிறது. அறிஞர்களின் பெண்ணியச் சிந்தனைகள் சமூகத்திற்கு சிறந்த வழிகாட்டியாக அமைகின்றது.

**அடிக்குறிப்புகள்:-**

பெண்ணியம் அணுகுமுறைகளும், இலக்கியப் பண்பாடும் - முனைவர். இரா. ரெங்கமடமாள், முனைவர். சி. வாசுகி, அறிவு பதிப்பகம்இ 142 ஜானிஜான்கான்ரோடு, ராயப்பேட்டை, சென்னை 14.

திருக்குறள், புலவர் வீ. சிவஞானம், விஜயாபதிப்பகம், கோயம்புத்தூர் 01.

பெண்ணியமும், தலித்தியமும், மா.கார்த்திகேயன் சீதை பதிப்பகம், 17ஃ1 தாச்சி அருணாச்சலம் தெரு மயிலாப்பூர் சென்னை - 04

பாரதியார் கவிதைகள், வானவில் பதிப்பாசிரியர் குழு, மணி வாசகர் நூலகம், சிதம்பரம் பதிப்பு 1986 கற்பகம் அச்சகம், சென்னை - 02

பெண்ணியம், முனைவர். இரா.பிரேமா, தமிழ்ப்புத்தகலாயம், தி.நகர். சென்னை - 17

சரிபாதி பெண்கள் சமமானவர்கள் தானா? பெண்ணுரிமைக் கையேடு, வழக்குரைஞர் பி. எஸ். அஜந்தா பாரதி புத்தகலாயம், சென்னை - 18

பெண், உ.வாசுகி, பாரதி புத்தகலாயம் சென்னை - 18

பெண் ஏன் அடிமையானாள், தந்தை பெரியார், பாரதி புத்தகலாயம், சென்னை - 18

பெண் எடுத்தகளமும் ஆசிரியர் ச. விஜயலட்சுமி, புத்தகலாயம், சென்னை - 18

பாரதிதாசன் கவிதைகள், ஒளி அச்சுக் கோர்வை, அமராவதி கிராபிக்ஸ், சென்னை - 33

பாரதிதாசன் பரம்பரை, உவகை கவிஞன் சுரதா, சுரதா பதிப்பகம், சென்னை - 78

பாரதி வழி ப. ஜீவானந்தம்.

பெரியாரின் சொற்பொழிவுகள்.

மகரிஷியின் சொற்பொழிவுகள்.

காந்திஜியின் இறுதி 200 நாட்கள், வி.ராமமூர்த்தி பாரதி புத்தகலாயம், சென்னை - 18

அண்ணா ஒரு பல்கலைக்கழகம், கார்த்திக் பிரிண்டர்ஸ், சிவகாசி

பெரியாரின் பெண்ணுரிமைக் கருத்துக்கள், சுனில் கில்னானி டீடீஊ